# பேச்சுப் போட்டியில் வாய்மொழித் தொடர்பாடல் பகுதி

## இணைப்பு வகுப்பு - மாதிரி வினாக்கள்

கேள்விகள் பேச்சு வழக்கில் கேட்கப்படும். உ+ம்: “உங்கட பேர் என்ன?”. மாணவர்கள் கேள்வியை விளங்கிக் கொள்ளாதவிடத்து, ஒத்த சொற்களைப் பயன்படுத்தியோ அல்லது எழுத்து வழக்கிலோ கேள்விகள் கோட்கப்படும். உ+ம்: கூறுங்கள் = சொல்லுங்கள் / மிருகம ் = விலங்கு.

1. வணக்கம். உங்கள் பெயர் என்ன?
   எந்தப் பாடசாலையில் படிக்கின்றீர்கள்?

2. உங்கள் வீட்டில் யார் யார் இருக்கின்றார்கள்?
   வீட்டில் உங்களுக்கு யாரை அதிகம் பிடிக்கும் (விருப்பம்)?
   ஏன் அவரைப் பிடிக்கும்?

3. உங்கள் நண்பரின் பெயர் என்ன?
   நீங்கள் நண்பர்களுடன் என்ன விளையாடுவீர்கள்?
   இந்த விளையாடடு ப் பற்றிக் கூறுங்களா?

4. உங்களுக்குப் பிடித்த தொலைக்காட்சி நிகழ்ச்சி எது?
   அதைப் பற்றிக் கூறுங்கள் (சொல்லுங்கள்)?

5. நீங்கள் எப்படிக் காலையில் பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாவீர்கள் (வெளிக்கிடுவீர்கள்) என்பது பற்றிச் சொல்லுங்கள்? (காலையில் எழும்பியதில் தொடங்கி).

6. நீங்கள் என்ன உணவு வகைளை (உணவுகளை) உண்பீர்கள்?

7. வேறு ஏதாவது நீங்கள் எங்களுக்குச் சொல்ல விரும்புகிறீர்களா?
   அதைக் (அவற்றைக்) கூறுங்கள்?

நன்றி.